# இயற்கைத் தமிழ் அரிச்சுவடி

## உயிர் எழுத்துகள்




அன்றில்
வறண்ட நிலப்பகுதிகளிலும், நீர்நிலைகளுக்கு அருகிலும் தென்படும் பறவை. இதற்குச் செந்தலை அன்றில், கறுப்பு அரிவாள்மூக்கன் எனும் பெயர்களும் உண்டு.




ஆவுளியா
கடலில் வாழும் பாலூட்டி இனமாகும். கடலின் தரைப் பகுதியில் வளரும் புற்களை உணவாகக் கொள்கிறது. ஆங்கிலத்தில் இதை Dugong அல்லது Sea cow என்பர். தற்போது Sea cow என்பதை அப்பட்டமாக மொழிபெயர்த்து கடல் பசு என அழைக்கப்படுகிறது. இருப்பினும் ஆவுளியா என்பதே இந்த உயிரினத்தின் சரியான பெயராகும்.





இரலை
கொம்புகளை உதிர்க்காத மான்களுக்கு இரலை (Antelope) என்று பெயர். படத்தில் இருப்பது ஆண் வெளிமான் (Blackbuck). இவை வெட்டவெளிகளில், புதர்க்காடுகளில் காணப்படும்.




ஈசல்
ஆண் கறையான்கள் முதிர்ச்சி அடைந்தவுடன் இறக்கை முளைத்து இனப்பெருக்கம் செய்யப் புற்றை விட்டு வெளியே பறந்து செல்கின்றன.




உடும்பு
உடும்பு ஊர்வன வகையைச் சேர்ந்த ஓர் உயிரினம். உடும்பின் கறி சாப்பிட்டால் நோய் குணமாகும் என்ற தவறான நம்பிக்கையால் உடும்புகள் அதிக அளவில் வேட்டையாடப்படுகின்றன. இதனால் இவை அழியும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.




ஊசித்தட்டான்
படத்தில் காணப்படுவது ஆண் தங்க ஊசித்தட்டான். இவை ஊர்ப்புறங்களிலும், வீட்டுத் தோட்டங்களிலும், வயல்வெளிகளிலும், புற்கள் நிறைந்த பகுதிகளிலும் பறந்து திரிவதைக் காணலாம்.

# உயிர் எழுத்துகள்

எட்டுக்கால் பூச்சி




எட்டுக்கால் பூச்சி
வீட்டு அறைகளின் மேல் பகுதியில், குறிப்பாக மூலைகளில் வலைபின்னி வசிக்கும். அதில் சிக்கும் கொசுக்கள், சிறிய பூச்சிகள் ஆகியவற்றை உண்ணும்.

ஏலக்காய்




ஏலக்காய்
மலைப்பாங்கான பகுதிகளில் வளரும் இஞ்சி வகைத் தாவரம். இவற்றின் காயும் விதையும் நறுமணப் பொருளாகப் பயன்படுகின்றன.

ஐந்தரம் (பனை)




ஐந்தரம் (பனை)
பனைமரத்திற்குத் தமிழில் ஐந்தரம் எனும் பெயரும் உண்டு. பனை தமிழ் நாட்டின் மாநில மரம் ஆகும்.

ஒளி மட்டி




ஒளி மட்டி
கடலில் காணப்படும் ஒரு வகைச் சிப்பி. இவற்றை மட்டி என்றும் அழைப்பர். சிப்பியின் மேலே ஒளி வீசுவது போன்ற வடிவம் இருப்பதால் ஒளி மட்டி என்று பெயர்

ஓவியச் சிறகன்




ஓவியச் சிறகன்
ஓவியம் தீட்டியது போன்ற இறக்கைகளைக் கொண்ட தட்டான்.

ஔடதம் (மருந்து)




ஔடதம் (மருந்து)
ஔடதம் என்பது நோய் போக்கும் மருந்துகளைக் குறிக்கும்.

# ஆய்த எழுத்து

அஃகம் (தானியம்)




அஃகம் (தானியம்)
அஃகம் என்பது புல்வகைத் தாவரங்களின் விதைகளான நெல், கோதுமை முதலான தானியங்களைக் குறிக்கும்.

# மெய் எழுத்துகள்

திருக்கை மீன்




திருக்கை மீன்
திருக்கை மீன் கடலில் வாழும். ஆங்கிலத்தில் Stingray என்பர்.

ஓங்கில்




ஓங்கில்
ஓங்கில் கடலில் வாழும் பாலூட்டி வகை உயிரினம். இது மீன் அன்று. ஆங்கிலத்தில் இதை டால்பின் (Dolphin) என்பர்.

இருவாச்சி




இருவாச்சி
படத்தில் காணப்படுவது சாம்பல் இருவாச்சி (Indian Grey Hornbill). பெரிய மரங்களில் உள்ள பொந்துகளில் முட்டையிடும். பெண் பறவை பொந்துக்குள் சென்று முட்டையிட்டு, குஞ்சு பொரிக்கும் வரை உள்ளேயே இருக்கும். இதற்கு ஆண்பறவை வெளியில் இருந்து உணவூட்டும்.

குறிஞ்சி




குறிஞ்சி
குறிஞ்சி, இந்தியாவில் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளிலும் இமயமலைப் பகுதிகளிலும் வளரும் ஒரு பூச்செடி. பல வகையான குறிஞ்சிச் செடிகளில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் நீலக்குறிஞ்சி பரவலாக அறியப்பட்ட ஓர் இனமாகும்.

வாலாட்டி




வாலாட்டி
வாலை மேலும் கீழும் ஆட்டிக்கொண்டே நடப்பதால் இதை வாலாட்டி என்பர். நீர்நிலைகளின் அருகில் உள்ள பூச்சிகளைப் பிடித்து உண்ணும். படத்தில் காணப்படுவது வெண்புருவ வாலாட்டி (White-browed Wagtail).

நண்டு




நண்டு
படத்தில் இருப்பது கடற்கரையில் தென்படும் ஒரு வகைச் சிவப்பு நண்டு. இதன் குச்சி போன்ற கண்கள் மேல்நோக்கி நீண்டிருக்கும்.

நத்தை




நத்தை
படத்தில் இருப்பது மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் மட்டுமே காணப்படும் ஓரிடவாழ்வியான இன்ட்ரெல்லா (Indrella) எனும் நத்தை வகை.

# மெய் எழுத்துகள்

சிலந்தி




சிலந்தி
வட்டவடிவில் வலை பின்னும் சிலந்தி வகைகளில் ஒன்று. எட்டுக்கால் பூச்சியும் சிலந்தியும் ஒன்றே.

மணிப்புறா




மணிப்புறா
கழுத்திலும் மேல் இறக்கைகளிலும் மணிமணியாகப் புள்ளிகள் இருப்பதால் இதை மணிப்புறா என்று அழைக்கிறோம்.

நல்ல பாம்பு




நல்ல பாம்பு
நல்ல பாம்பு எலிகளை உண்டு உழவர்களுக்கு உதவும். இது நஞ்சுடையது. நாம் தெரியாமல் அதை மிதித்துவிட்டால் மட்டுமே தற்காப்புக்காகக் கொத்தும். ஆனால் யாரையும் துரத்தி வந்து கொத்துவதில்லை.

நாகணவாய் (மைன




நாகணவாய் (மைனா)
நாகணவாய் என்றழைக்கப்படும் மைனாவை ஊர்ப்புறங்களில் காணலாம்.

நீர் நாய்




நீர் நாய்
இது ஆறு, ஏரி போன்ற நீர்நிலைகளில் வசிக்கும்; மீன்களைப் பிடித்து உண்ணும்.

வெளவால்




வெளவால்
படத்தில் காணப்படுவது பழந்திண்ணி வெளவால். வெளவால்கள் பாலூட்டிகள்; பறவைகள் அல்ல.

# மெய் எழுத்துகள்

செவ்வந்திச் சிறகன்




செவ்வந்திச் சிறகன்
செவ்வந்திப் பூ நிற இறக்கைகளில் கறுப்பு, வெள்ளைப் புள்ளிகளைக் கொண்ட ஒரு வகை வண்ணத்துப்பூச்சி.

குமிழ்த் தேக்கு




குமிழ்த் தேக்கு
மஞ்சள் நிறப் பூப் பூக்கும் ஒரு வகை மரம்.

தேள்




தேள்
தேள் தனது கொடுக்கை வைத்துக் கொட்டிச் சிறிய பூச்சிகளைப் பிடித்து உண்ணும். நாம் தெரியாமல் மிதித்துவிட்டாலன்றித் தானாக நம்மைத் தேடி வந்து கொட்டாது.

கறையான் புற்று




கறையான் புற்று
கறையான்கள் தரைப்பகுதியில் இருந்து மண்ணை எடுத்து கோபுரம் வடிவில் புற்றைக் கட்டி அதன் உள்ளே கூட்டமாக வாழும்.

காளான்




காளான்
காளான்கள் இறந்த உயிரினங்களை மட்கச் செய்து மண்ணின் வளத்தைப் பெருக்குகின்றன.

# உயிர் மெய் எழுத்துகள்

கரிச்சான்




கரிச்சான்
கரிச்சான் குருவி, இரட்டைவால் குருவி போன்ற வேறு பெயர்களும் இதற்கு உண்டு. மின் கம்பிகள் மேலும், சில வேளைகளில் கால்நடைகளின் முதுகிலும் அமர்ந்திருப்பத்தைக் காணலாம்.

ங இருவாச்சி




ங இருவாச்சி
மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளின் மழைக்காடுகளில் தென்படும் இதற்கு சோலை இருவாச்சி என்று பெயர். இது குரலெழுப்பும் விதம் ங்ங...ங்ங.. என்று இருப்பதால் இப்பறவையை ங இருவாச்சி என்றும் அழைக்கலாம்.

சங்கு




சங்கு
கடலில் வாழும் நத்தைகளுக்கு மேல் இருக்கும் கடினமான ஓடு போன்ற பகுதிக்குச் சங்கு என்று பெயர்.

ஞமலி (நாய்)




ஞமலி (நாய்)
மனிதர்களுக்குத் தோழனான நாய்க்கு ஞமலி என்ற பெயரும் உண்டு.

கடமான்




கடமான்
இந்தியக் காடுகளில் வாழும் மான்களிலேயே உருவில் பெரியது கடமான். ஆண் மானுக்குக் கிளைத்த கொம்புகள் இருக்கும்.


தணக்கு மரம்




தணக்கு மரம்
இலையுதிர் காடுகளில் வளரும் மரம். இம்மரத்தின் பட்டை பளபளப்பாக இருக்கும். இதன் விதையின் மேல் இரண்டு இறக்கை போன்ற அமைப்புகள் உள்ளன.இதனால் இவை முதிர்ந்தவுடன் கீழே விழும்போது சுற்றிக்கொண்டே காற்றில் பறந்து வேறு இடங்களுக்குப் பரவுகின்றன.

# உயிர் மெய் எழுத்துகள்

தரைத் தட்டான்




தரைத் தட்டான்
வயல்வெளிகளிலும் வீட்டுத் தோட்டங்களிலும் சுற்றித் திரியும்.

வங்கு நரி




வங்கு நரி
தரையில் வங்கு (குழி) குடைந்து அதனுள் குட்டிகளை ஈனும். உருவில் சிறியது. இவற்றைக் குள்ள நரி என்றும் அழைப்பர்.

பலா





பலா
பலாக் காய்கள் மரத்தின் தண்டிலேயே காய்க்கும். பாலாச் சுளைகள் மிகவும் சுவையானவை.

மத்தி மீன்




மத்தி மீன்
கடலில் வாழும் ஒரு வகையான மீன். இதை ஆங்கிலத்தில் Sardine என்பர்.

முயல்




முயல்
முயல் காடுகளில் காணப்படும். இதன் காதுகள் நீண்டவை. பிடரி கறுப்பாக இருப்பதால் இதன் ஆங்கிலப் பெயர் Black-naped Hare.

அரணை




அரணை
அரணை ஊர்வன வகையைச் சேர்ந்தது. இதற்கு நஞ்சு இருப்பதாகப் பலர் தவறாக நினைக்கின்றனர்.

# உயிர் மெய் எழுத்துகள்

அலங்கு




அலங்கு
ஆங்கிலத்தில் Indian Pangolin என்று அழைக்கப்படும் இந்தப் பாலூட்டியின் உடலின் மேல் செதில்கள் காணப்படும். இது எறும்புகளை உண்பதால் ஆங்கிலத்தில் Ant-eater என்பர். இதையே அப்பட்டமாக மொழிபெயர்த்து எறும்புத்திண்ணி என தவறாக அழைக்கின்றனர். அலங்கு என்பதே பொருத்தமான தமிழ்ப் பெயர்.

வக்கா




வக்கா
வக்கா அல்லது இராக்கொக்கு (Black-crowned Night heron) பொதுவாக இரவு நேரங்களில் நீர்நிலைகளின் அருகில் அமர்ந்து இரை தேடும். இவை பறக்கும்போது வ்வாக்...வ்வாக்..என்று குரலெழுப்பும். இதனாலேயே வக்கா என்று பெயர் பெற்றது.

உழவாரன்




உழவாரன்
பனை மரங்கள் நிறைந்து இருக்கும் பகுதிகளில் இப்பறவைகள் பறந்துகொண்டிருப்பதைக் காணலாம். பனை உழவாரன் (Asian Palm Swift) என்று அழைக்கப்படும் இவை காற்றில் பறந்துகொண்டே பூச்சிகளைப் பிடித்து உண்ணும்.

குளவி




குளவி
மஞ்சளும் கறுப்புமாக இருக்கும் இந்தக் குளவி ஈரமான மண்ணைக் குழைத்துக் கூடு கட்டி அதனுள்ளே முட்டையிடும். இவற்றைத் தொந்தரவு செய்யாமல் இருந்தால் இவை நம்மைக் கொட்டுவதில்லை.

மலைச் சிறகன்




மலைச் சிறகன்
மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் தென்படும் ஆரஞ்சு நிறத்தில் இருக்கும் ஒரு வண்ணத்துப்பூச்சி மலைச் சிறகன். இதை ஆங்கிலத்தில் Tamil Yeoman என்பர். இது தமிழ்நாட்டின் மாநில வண்ணத்துப்பூச்சி ஆகும்.

வானம்பாடி




வானம்பாடி
வானத்தில் பறந்துகொண்டே, இனிமையாகப் பாடுவதால் இப்பறவையை வானம்பாடி (Indian Skylark) என்பர்.

தயாரிப்பு: Nature Classrooms & Nature Conservation Foundation
கருத்தாக்கம்: ப. ஜெகநாதன், அதித்தி ராவ் & வெனா கபூர்
ஓவியம்: காருண்யா பாஸ்கர்
ஆலோசகர்கள்: அர. செல்வமணி, ராம்கி (பரிதி) & ஆஷா

nature conservation foundation
Nature Classrooms

சுவர்ப்படத்தை இந்த உரலியிலும் QR codeஐ scan செய்தும் பெறலாம் -
https://www.natureclassrooms.org/nature-alphabets-in-tamil